**ஹங்குரன்கெத பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹங்குரன்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் விலை கோரல் இன்றி அல்லது உடன்படிக்கை செய்யாமல் கணினி உதிரி பாகங்கள் கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்பில் ரூபா 954,925 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 520,373 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்கில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதி கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ஆயுர்வேத மருந்துகள் ரூபா 314,723 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

#### 1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 நாட்குறிப்புகள் மூலம் ரூபா 28,418,523 ஆன கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் மற்றும் வீத வரி மீதிகள் கணக்குகளில் இருந்து பதிவழிக்கப்பட்டு இருந்த போதும் | நிர்மாண கடன்பட்டோர் மற்றும் நிர்மாண கடன் கொடுத்தோருக்காக சரியான மீதிகள் இனங் | பதிவழிப்பதற்காக முறையான அங்கீகாரம் ஒன்று பெற்றுக் |

| | | |
|---|---|---|
| அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்டு அடுத்து வரும் ஆண்டில் கணக்குகளில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | கொள்ளப்பட வேண்டும் |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,623,025 பெறுமதியான 05 கணக்கு மீதிகள் அட்டவணைகள் மற்றும் செலவின விடயங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | இம்மீதிகளில் முன்னைய ஆண்டுகளில் இருந்து வரும் மீதிகள் இணங்காமை காணப்படுவதால் அதனை எதிர்காலத்தில் சீராக்கி சரியான அட்டவணைகளைத் தயாரிப்பதாக | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு பேணி செல்லப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | உப உறுப்புரை | | | |
| (i) | 2011 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 1726/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வாடகை வாகனங்கள் நிறுத்தி வைத்தல் தொடர்பான உறுப்புரை | அதிகார பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட 41 இடங்கள் இனங்காணப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் 32 முச்சக்கர வண்டி நிறுத்துமிடங்கள் வெளியிடப்பட்டு பராமரித்துச் செல்லப்படுவதாக | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற நியம உப உறுப்புரையின் xxxix ஆவது உப உறுப்புரை | காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதைகள் தலைவரினால் அங்கீகரிக்கப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் 98 விளம்பர பதாதைகளுக்காக ரூபா 166,684 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த வியாபார நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | | |
| | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2013 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை | விலை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள தாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,328,001 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 876,978 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரியும் வரியும் | 4,294,300 | 5,288,672 | 5,478,464 | 1,760,691 | 4,273,000 | 4,729,785 | 2,522,152 | 1,950,481 |
| (ii) | வாடகை | 6,132,600 | 2,135,839 | 2,218,859 | 2,400,253 | 5,441,900 | 2,138,077 | 3,789,740 | 2,483,273 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 866,200 | 2,327,862 | 2,327,862 | - | 1,160,200 | 1,939,077 | 1,939,082 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 81,723,134 | 17,970,936 | 21,212,496 | 4,607,719 | 69,731,900 | - | 62,381,511 | 7,849,279 |
| | | 93,016,234 | 27,723,309 | 31,237,681 | 8,768,663 | 80,607,000 | 8,806,939 | 70,632,485 | 12,283,033 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,136,528 ஆன | வீதவரி செலுத்தாதுள்ள 10 நபர்களுக்கு ரீட் கட்டளை | நிலுவை வருமானம் |

| | | | |
|---|---|---|---|
| | வீத வரி நிலுவை மீதியில் 01 ஆண்டுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய 155 வீத வளவுகளிலிருந்து ரூபா 294,582 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 72 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 304,217 தொகையான அறவிடப்பட வேண்டிய மீதிகளை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவை தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒன்று வழங்குவதற்காக தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக | அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வாடகை<br>2020 ஆம் ஆண்டு முதல் நிலுவையாக காணப்படும் ரூபா 2,214,532 ஆன கடை கூலிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | உரித்தினை கையேற்பதற்காக கோவைகள் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | அனுமதிப்பத்திர கட்டணங்கள்<br>மீளாய்வாண்டின் 14 நிர்மாணங்களுக்குரிய 28 இடங்களில் இருந்து ரூபா 28,000 கூட்டுத்தொகையான அனுமதிபத்திரக் கட்டணங்கள் மற்றும் நிர்மாண வரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | ஏனைய வருமானம்<br>மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 75,375 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 396,619 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,211,100 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இடமாற்றம் பெற்றுச் சென்ற 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 380,420 ஆன கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மீதிகளில் வேறுபாடு ஒன்று காணப்படுவதால் அதனை தீர்வு செய்வதற்கு முடியாமல் இருந்ததாக | இணக்கமின்மைகளை தேடிப் பார்த்து தீர்வு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 03 பொது மலசல கூடங்கள், வாகன நிறுத்தி வைக்கும் இடம் ஒன்று போன்றவற்றை எசல பெரஹர காலப்பகுதியில் மாத்திரம் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த போதும் ஆண்டின் எஞ்சிய காலப் பகுதிக்காக ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததன் காரணமாக சபைக்கு பெறக்கூடிய வருமானம் ஒன்று இழக்கப்பட்டு இருந்தது. | எதிர்காலத்தில் சபைக்கு வருமான மார்க்கம் ஒன்றாக நடவடிக்கை எடுப்பதாக | கேள்வி கோரி கையளித்து வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் 76 பொது மயானங்களின் உரித்து சபைக்கு கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | மயானங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுர்வேத நிலையங்கள், சுடலைச் சாலைகள் நூலகங்கள் முன்பள்ளிகள், மலசல கூடங்கள் போன்ற 10 கட்டிடங்கள், ரிகல்லகஸ்கடயிலுள்ள 10 கடைகள் மற்றும் ரஹதுன்கொட சந்தை பூமியின் கட்டிடங்கள் முறையான பராமரிப்பு இன்றியும் திருத்தம் செய்யப்படாமலும் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டு இருந்ததுடன் சில கட்டிடங்கள் மற்றும் காணிகளுக்காக எல்லை வேலி இட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | சபையின் நிதி ஏற்பாடு போதுமாக இல்லாததால் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொண்டு திருத்தங்களை மேற்கொள்வதாக | பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டியதுடன் கட்டிடங்களை திருத்தம் செய்து பராமரித்து செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | ரிகல்லகஸ்கட விளையாட்டு அரங்கில் 33'x21' அளவிலான விளையாட்டு அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு கொங்கிரீட் தூண் இடப்பட்டு இரும்பு சட்டகமும் நிர்மாணிக்கப்பட்டு இருந்த போதும் அதன் கூரை நிர்மாணிக்கப்படாததன் காரணமாக பயன்பாட்டுக்கு எடுக்க முடியாததாக காணப்படுவதுடன் இரும்பு சட்டகம் சிதைவடையும் ஆபத்தொன்று காணப்பட்டது. | இந்த இடத்தை பராமரிப்பதற்காக நிதி ஏற்பாடு கிடைத்தால் நிர்மாணத்தை மேற்கொள்வதாக | நிர்மானத்தைப் பூர்த்தி செய்து பயன்பாட்டுக்கு எடுக்க வேண்டும். |
| (ஈ) | திக்கலஹின்ன சுடலைசாலையின் காணியின் வேலை எல்லை குறியிடப்படாதிருந்ததுடன் சுடலைசாலையின் கொங்கிரீட் | எதிர்காலத்தில் திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | சபையின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | தளத்தில் கம்பிகள் சிதைவடைந்து காணப்பட்டன. | | வேண்டும். |
| (உ) | காணி மற்றும் கட்டிடங்கள் உருப்படிகள் ஐந்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதாக | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் மத்திய மாகாண வியாபார வர்த்தக மற்றும் சுற்றுலாத் திணைக்களம் ரூபா 2,600,000 தொகை செலவழித்து கொலபத்தன அல்ல சுக நலன் வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட மலசல கூடங்கள் மின்சார இணைப்பு வழங்காமை, நுழைவு வீதி ஒன்று இல்லாமை போன்ற காரணங்கள் அடிப்படையில் பயன்பாடு இன்றி மூடப்பட்டிருந்தன. | தற்போது நீர் வசதி வழங்கப்பட்டுள்ளதுடன் மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளதாக | குறித்த குறைபாடுகளை நீக்கி பயன்பாட்டுக்கு இருக்கக்கூடிய நிலைமைக்கு உட்படுத்த வேண்டும் |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 17 பதவிகளில் 38 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் 01 பதவியில் 09 மிகைகளும் காணப்பட்டன. 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயலாளர் பதவி, வேலை நிர்வாகி முன்பள்ளி ஆசிரியர் பதவி, சுடலைசாலை செயற்பாட்டாளர் மற்றும் பெக்கோ லோடர் செயற்பாட்டாளர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் இல்லாமை காரணமாக ஹங்குரன்கெத மற்றும் இடம்பிட்டிய ஆயுர்வேத நிலையங்கள் ஒருநாள் மாத்திரம் நோயாளர் சிகிச்சை சேவைக்காக திறந்து காணப்பட்டது. | நிரந்தர வைத்திய ஒருவர் உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் மூலம் ஹங்குரன் கெத பிரதேச சபைக்கு இணைக்கப்பட்டிருக்க வில்லை என்பதாக | பொதுச் சேவைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் விரும்பத்தகாத அபாயகரமான வியாபாரங்களை இனங்காணுதல், சுற்றாடல் சிக்கல்களை இணங்காணுதல், உணவு பானங்கள் மற்றும் நகர சுகநலன் நடவடிக்கைகள், | அதிகாரப்பிரதேசத்தில் வாழும் பொதுமக்களின் நலன்களின் பொருட்டு நலன்புரி நிகழ்ச்சிகள் | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| உப உறுப்புறைகளைத் தயாரித்தல், பயிற்சி நிகழ்ச்சிட்டங்களை திட்டமிடல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை பெறாத வியாபாரங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதாக செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டு இருக்கவில்லை | பிரதேச சபை மூலம் நடைமுறைப்படுத்தப்பட டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது வருமான மூலங்களை இனங்காண்பதற்காக பிரதேச சபை உத்தியோகத்தர் களுடன் கூடிய குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாக. | எடுத்தல் வேண்டும் |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் - 3 சதவீதம் முதல் 36 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 03 சதவீதம் முதல் 32 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்படுத்த முடியாதிருந்ததாக | மதிப்பீட்டின் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |